ராணி
காமிக்ஸ்
முகமூடி வீரர் மாயாவி தோன்றும்
கடலில்
கவிழ்ந்த
கப்பல்

பரிசுபெற்ற படங்கள்!

டி. மீனாட்சி,
காஞ்சிபுரம்.



கே. பாக்கியலெட்சுமி,
விழுப்புரம்.

சி. வினோத்குமார்,
கோவை-5.

என். ஜெயப்பிரகாஷ்,
சென்னை-34.

ராணி காமிக்ஸ்–208
(மாதம் இருமுறை இதழ்)

பிப்ரவரி 16–28
1993

முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்

Tex Sampath Tirupur
Tex Sampath Tirupur

பயணிகளின் உல்லாசக் கப்பல் ஒன்று நடுக்கடலில் சென்றுகொண்டிருந்தது.
கேப்டன்! கப்பல் வேறு பக்கமாக செல்கிறதே!
அந்தப் பக்கம் ஒரே பாறைகளாக இருக்கின்றன!
ரோஸி!
என்ன டார்லிங்?
கேப்டனுடன் என்ன செய்துகொண் டிருக்கிறாய்?
பொழுது போக வேண்டுமே ஜான்! அதான் அவருடன் பேசிக் கொண்டிருந்தேன்!

Tex Sampath Tirupur

அதிலிருந்து மாயாவியின் தலைமுறையினர் இங்கேதான் தேனிலவை கொண்டாடினார்கள்.

அதன்பிறகு, குறிப்பிட்ட ஒரு நாளில் காட்டுவாசிகளின் திருமணத் தம்பதிகள் இங்கே வந்து பொழுதைக் கழிக்க மாயாவி அனுமதித்தார்.
இந்த வீட்டுக்குள் போய் வாருங்கள்! வாழ்வில் இன்பம் பொங்கும்!

கப்பலில் ஆண்கள் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்.
ஆகா! எனக்குத்தான் வெற்றி!
இந்த முறையும் தோற்று விட்டேன்!

பெண்கள் நீச்சல் உடையில் வெயிலில் காய்ந்துகொண்டிருந்தார்கள்.
ஆண்கள் ஏன் இங்கே வர மாட்டேன்கிறார்கள்?
ஒரே சிட்டாட்டம் தான்!
ஆமாம்!

ஏய்...! அதோ ஒரு கடற்கரை தங்கம் போல தகதகவென மின்னுகிறதே!
ஆமாம்! அசத்தலாக இருக்கிறதே!
நடுவில் ஒரு வீடுகூட இருக்கிறதே!

கேப்டன்! நாம் அங்கே போகலாமா?
ஆமா கேப்டன்! நாம் உடனடியாக அங்கே போக வேண்டும்!
?
கேப்டன்! நீங்களே அந்த அழகை பாருங்களேன்!
நாம் அங்கே போவோமே!
அங்கே மனிதர்கள் நடமாட்டம் இருப்ப தாகத் தெரிய வில்லை!
ஆபத்து நிறைய இருக்கும்!
வீடுகூட அங்கே இருக்கிறதே!
இருந்தாலும் அங்கே செல்ல முடியாது வழி நெடுக பாறைகள் இருக்கின்றன!

சீட்டு ஆட்டத்தில்-
ஆயிரம் ரூபாய்...!
ரோசி! என்னை தொந்தரவு செய்யாதே!
ஜான்! நாங்கள் ஒரு அழகான கடற்கரைக்கு கப்பலை செலுத்தச் சொன்னால் கேப்டன் போக மறுக்கிறார்!
கேப்டனிடம் நீங்கள் வந்து சொல்லுங்கள்!
SY BARRY 12/10
ஏய் கேப்டன்! பெண்கள் ஆசைப்பட்டால் அங்கே கப்பலை செலுத்த வேண்டியது தானே!
மன்னிக்கவும் ஜான்! அது ஆபத்தான இடம்: அங்கே போகக் கூடாது!
அதுமட்டுமில்லாமல் வழி நெடுக பாறைகள் இருக்கின்றன!

அதெல்லாம் எனக்குத் தெரியாது! ஒரு வாரத்துக்கு கப்பலுக்கு பணம் கொடுத்திருக்கிறேன். பெண்கள் ஆசைப் படும இடங் களைக் காட்ட வேண்டும்!
கேப்டன் என்ற முறையில் சொல்லுகிறேன். அங்கே போக முடியாது!
முட்டாள்! என்ன தைரியம் இருந்தால் இந்த ஜானிடமே முடியாது என்பாய்!
?!
உடனே ஜான் துப்பாக்கியை எடுத்தான்.
நீ என்னிடம் கூலி வாங்கும் வேலைக்காரன்! நான் சொல்கிறபடி கப்பலை அந்தக் கடற்கரைக்கு திருப்பு!
முடியாது! வேண்டுமானால் படகை இறக்குகிறேன்! சென்று வாருங்கள்!

ஜான்! நான் சொல்வதைக் கேளுங்கள்!
ஜான்! கேப்டன் சொல்வது சரியாகத்தான் இருக்கும்.
அதெல்லாம் தெரியாது! நீ ஆசைப்பட்டு விட்டாய்!
ஜான்! என்ன தகராறு?
இந்த கேப்டன் என்னிடம் விளையாட்டுக் காட்டுகிறான்!
ஜானின் கூட்டாளிகள் விரைந்து வந்தார்கள்.


ஏய்! சொல்கிறபடி கேள்! இல்லை, வீணாக உயிரை விட்டுவிடாதே!
ஏய் மடத்தனமாக உளறாதே! அங்கே பாறைகள் நிறைய இருக்கின்றன. ஆபத்து!

ஏய் மிஸ்டர்! துப்பாக்கியை கீழே போடு!
நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்கவேண்டிய அவசியமில்லை!
போங்கள்! மரியாதையாக உங்கள் வேலைகளை பாருங்கள்!
!?
கேப்டனுக்கு உதவியாக அவருடைய உதவியாளர்கள் வந்தார்கள்.

கடலில் திடீர் புயல்! கடல் கொந்தளித்தது. அலைகள் மேல் எழும்பி கப்பலுக்குள் புகுந்தன.
அய்யோ! புயல் வந்து விட்டதே! கப்பல் தாறு மாறாக செல்கிறதே!
இப்பொழுது என்ன செய்வது?
அய்யோ! பாறையில் மோதி காற்றாடி நொறுங்கி விட்டது! படகை விரைவாக இறக்குங்கள்!
டமால்
முதல் உதவிக்கு சிறிய படகு கடலில் இறக்கப்பட்டது.
கேப்டன்! எங்கள் ஆட்களுக்கு இன்னும் இரண்டு படகை இறக்குங்கள்!
அவசரப்படாதீர்கள்! முதலில் இதில் இறங்குங்கள்!
முதல் படகில் பாதிப் பேர் இறங்கினார்கள்.
அதற்குள் பெரிய அலை ஒன்று அந்த படகை கவிழ்த்தது.
அய்யோ... படகு கவிழ்ந்து விட்டதே!

கடலில் கொந்தளிப்பு மிகவும் அதிகமாக இருந்தது.
முட்டாள்கள்! ஒரு படகை சமாளிக்கத் தெரியவில்லை!
இந்தாருங்கள்! இந்த டியூப்பையாவது பயன்படுத்திக் கொள்ளுங்கள்!
கடலில் தத்தளிப்பவர்களுக்கு டியூப் கொடுக்கப்பட்டது.

ஜான் துப்பாக்கிமுனையில் காற்றடைத்த படகை அபகரித்தான்,

இருங்கள்! நாங்களும் உங்களுடன் வருகிறோம்!
இல்லை! இது எனக்கும் ரோசிக்கும் மட்டும்தான்! ரோசி கடலில் குதி!

காற்றடைத்த படகு கடலில் மிதந்ததும், ரோசியை அதில் ஏற்றிவிட்டான்.
ரோசி! இதில் ஏறிக்கொள்!
இது கவிழ்ந்து விடாதே!

ஜான்! என்னையும் இதில் ஏற்றிக் கொள்!
இதில் எங்கள் இருவருக்கும்தான் இடமிருக்கிறது!

Tex Sampath Tirupur

நடுக்கடலில் கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கிக் கொண்டிருந்தது.
ஜானும் ரோசியும் தங்கக் கடற்கரையில் கரை ஏறினார்கள்.
நல்லவேளை தப்பித்தோம்!
இனி கவலை யில்லை!

டார்லிங்! இந்த கடற்கரையின் மணலை பார்த்தீர்களா, மஞ்சளாக இருக்கிறது!
இனி புயல் வந்தால் இந்த வீட்டுக்குள் மறைந்து கொள்ளலாம்!


நடுக்கடலில்— அந்த சமயம் பார்த்து இன்னொரு கப்பல் வந்தது.
அங்கே பார்த்தாயா?
ஒரு கப்பல் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிறது!
அதோ கப்பல்!

உடனே கப்பலில் இருந்து சிறிய படகை இறக்கி கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை காப்பாற்றினார்கள்.
என்னையும் காப்பாற்றுங்கள்!
நான் இங்கே இருக்கிறேன்!
எல்லாரையும் காப்பாற்றுவோம். பயப்படாதீர்கள்!
தங்கக் கடற்கரையில்–
ரோசி! இன்னொரு கப்பல் வந்திருக்கிறது!
அனைவரையும் அவர்கள் காப்பாற்று விட்டார்கள்!
ஜானின் கூட்டாளிகள் அனைவரும் புதிய கப்பலில் அடைக்கலம் புகுந்தார்கள். ஜான்– ரோசியை தவிர அனைவரும் ஏறிவிட்டார்கள்!
ஜான் என்னை படகில் ஏற்ற மறுத்தது இல்லாமல் துப்பாக்கியை காட்டி மிரட்டி விட்டான்!
கடற்கரையில்–
உதவி! உதவி! எங்களை காப்பாற்றுங்கள்!
அய்யோ! எங்களையும் கூட்டிச் செல்லுங்களேன்!

கப்பலில்–
அதோ நம் ஆட்கள்! அவர்களையும் காப்பாற்றுகள்!
ஓ.கே.!
கடற்கரையில்–
ஜான்! நாம் வந்த கப்பல் மூழ்கி விட்டது!
நம்மைத் தவிர மற்றவர்கள் எல்லாம் புதிய கப்பலில் ஏறிக் கொண்டார்கள்!
எங்களையும் கூட்டிச் செல்லுங்களேன்!
நாம் கத்துவது அவர்களுக்கு கேட்காது!

உடனே- ஜான் தன் சட்டையை கழற்றி கொடி போல அசைத்தான்.
இப்போது அவர்கள் நம்மை பார்க்கக்கூடும்!

ஜானின் கூட்டாளி ஒருவன் பைனாகுலர் மூலமாக பார்த்தான். அதில் ஜானும், ரோசியும் தெரிந்தார்கள்.
ஏதாவது தெரிகிறதா?
!
கேப்டன் கேட்டார்.

உடனே அவன் நினைத்துப் பார்த்தான்.
ஜான்! என்னையும் அழைத்துச் செல்!
இல்லை! எங்கள் இருவருக்குந்தான் இடம் இருக்கிறது!
இதுதான் சமயம்!
கேப்டன்! எதுவும் தெரியவில்லை!
கடற்கரையில்–
ஜான்! கப்பல் போய்விட்டது!
அய்யோ! இனி அடுத்த கப்பல் வரும்வரை இங்கேயே காத்திருக்க வேண்டியதுதான்!
இந்த மணல் என் உடல், தலைமுடியைக் கூட மஞ்சளாக்கி விட்டதே!
ஆமாம்! இதில் ஏதோ இரசாயனப் பொருள் கலந் திருக்கிறது!

இருவரும் தீவை சுற்றிப் பார்க்க புறப்பட்டார்கள்.
இந்தத் தீவில் வேறு மனிதர்கள் இருக்கிறார்களா?
தெரியவில்லை! ஆ...! என் 'ஷூ' முழுக்க மணல் நிரம்பிவிட்டது!
யார் இவர்கள்?
வா மாயாவியிடம் சொல்வோம்!
அப்போது இரண்டு காட்டுவாசிகள் அவர்களை கண்டார்கள்.

இந்தத் தீவு எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது டார்லிங்!
முதலில் இங்கிருந்து புறப்பட வழி பார்க்க வேண்டும்!

இங்கே நின்று பலன் இல்லை!
முதலில் மாயாவியிடம் விசயத்தைச் சொல்வோம்!
உடனே முரசு கொட்டுபவன் செய்தியை பரப்பினான்.
இரண்டு பேர் தங்கக் கடற்கரைக்கு வந்திருக்கிறார்கள்!
டார்லிங்! ஏதோ முரசு சத்தம் கேட்கிறதே!
முரசு சத்தம் கேட்பதைப் பார்த்தால் இந்தத் தீவில் மக்கள் வசிக்கிறார்கள் என்று நினைக்கிறேன்!
இரண்டு பேர் தங்கக் கடற்கரைக்கு வந்திருக்கிறார்கள்!
செய்தி கிராமம் கிராமமாக பரவியது.

முடிவில் அடர்ந்த காட்டிலிருக்கும் மாயாவிக்கு செய்தி எட்டியது.
மாயாவி! தங்கக கடற்கரைக்கு யாரோ இரண்டு பேர் வந்திருக்கிறார்களாம்!
நான் பார்த்து வருகிறேன்!
டம்...டம்... டம...டம...

நானும் டாமும் வரட்டுமா மாமா?
வேண்டாம் ரெக்ஸ்! ஏதாவது விபரீதம் நடந்தாலும் நடக்கும்!

Tex Sampath Tirupur

இவர்கள் எப்படி இங்கே வந்தார்கள்?
கொஞ்ச நேரத்துக்கு முன்பு ஏற்பட்ட புயல் காரணமாக கடற்கரையில் கரை ஒதுங்கி யிருப்பார்கள்!
இவர்கள் வந்த பெரிய படகு கடலில் மூழ்கியிருக்கும் என நினைக்கிறேன்!
இருந்தாலும் இருக்கலாம்!
இங்கே வந்தது அவர்களது தப்பில்லை! அதனால் அவர்களை அழைத்துச் சென்று காட்டு எல்லையில் விட்டு விடுங்கள்!
இப்போதே உங்கள் கட்டளையை நிறைவேற்றி விடுகிறோம்.

அப்போது மாயாவி அனுப்பிய காட்டுவாசிகள் ஓடிவந்தார்கள்.

உடனே காட்டுவாசிகள் அவர்களை உட்கார வைத்து தூக்கிச் சென்றார்கள்.
இவர்களை என்னவோ நினைத்தேன்!
பரவாயில்லை. நமக்கு உதவத்தான் வந்திருக்கிறார்கள்!
காட்டுவாசிகள் அவர்களை காட்டு எல்லையில் இறக்கி விட்டார்கள்.
ரொம்ப நன்றி! உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை!
நகர எல்லை ஆரம்பம்!
இருவரும் நகரில் அறை எடுத்து தங்கினார்கள். ரோசி முதல் வேலையாக குளித்தாள்.
காட்டுவாசிகள் நம்மிடம் நடந்து கொண்ட முறை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது!
உடனடியாக ஒரு வேலைக்காரனை அனுப்புங்கள்!
வேலைக்காரன் எல்லாவற்றையும் சுத்தம் செய்தான்.
ஒரு தீவுக்குச் சென்று இருந்தேன்! அங்குள்ள மணல்தான் இது.
தங்கத் தூள் மாதிரி அல்லவா இருக்கிறது!

என்ன சொல்கிறாய்?
இது மணல் இல்லை! தங்கத் தூள்!
ஜானி யாருடன் பேசிக்கொண் டிருக்கிறீர்கள்?
அறையை சுத்தம் செய்ய ஆள் வந்திருக்கிறது!
அப்படியானால் இது தங்கத் தூள் என்றுதான் சொல்கிறாயா!
ஆமாம்! இதை எங்கேயிருந்து எடுத்தீர்கள்?

ஜான் வேலைக்காரனை விரட்டி அடித்தான்.

ரோசிக்கு துண்டை எடுத்துப் போட்டு விட்டு ஜான் வேகமாக புறப்பட்டான்.
டார்லிங்! எங்கே புறப்பட்டு விட்டீர்கள்?
இரு. இப்போது வந்து விடுகிறேன்!
ஜான் நேராக தங்க நகை செய்பவரிடம் வந்து விசாரித்தான்.
இந்த மணலில் 50 சதவீதம் தங்கம் கலந்திருக்கிறது!
!
வேலைக்காரன் ஜானை பின் தொடர்ந்து வந்தான்.
ஆகா! அதிருஷ்டம் என்றால் இதுதான்! அந்த இடம் என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது!
அதேநேரம் தங்கக் கடற்கரையில்—
மாயாவி! அவர்கள் இருவரையும் காட்டு எல்லையில் விட்டுவிட்டோம்!
நல்லது! அப்படியானால் நான் புறப் படட்டுமா?

நீங்கள் சொல்கிற இடத்திற்கு கப்பல், படகு எதுவும் போக முடியாது! வழி நெடுக பாறைகள் இருக்கின்றன!
அங்கே செல்ல சாலை வசதி இருக்கிறதா?

இல்லை! அது காட்டுப் பகுதி! நடந்துதான் செலல வேண்டும்.
ரொம்ப நன்றி!
இனி நான் பார்த்துக் கொள்கிறேன்!


படகும் செல்ல முடியாது! காரும் போக முடியாது! அப்படியானால் விமானத்தில் போய் இறங்க வேண்டியது தான்!


ரோசியும் ஜானும் பெங்காலியா விமான நிலையம் வந்தார்கள்.
தங்கத் துகள்கள் பற்றி யாருக்கும் தெரியாது. ஏன் ரோசிக்கு கூட தெரியாது!
நம் கூட்டாளிகள் நாம் இறந்துவிட்டதாக நினைத்துக்கொண்டிருப்பார்கள். போய் நின்றால் அதிர்ச்சியடைந்து விடுவார்கள்!
BENGALI

ஏய்...! ரோசி! அவர்களைப் பொறுத்தவரை நாம் செத்ததாகவே இருக்கட்டும்!
ஓ.கே. டார்லிங்!
?

எனக்குச் சொந்தமாக சரக்கு ஏற்றிச்செல்ல வசதியாக ஒரு ஹெலிகாப்டர் வேண்டும்!
நிறைய மாதிரி இருக்கிறது! எது வேண்டும்?
மைக்! ஒரு ஐந்து பேரை உடனடியாக அனுப்பு! நான் பேசியதாக யாரிடமும் சொல்லாதே!
ஓ.கே. ஜான்!
வேலையில் இருந்து நீக்கப்பட்ட விமானி ஒருவர் உடனடியாக வேண்டும்?
இதோ இந்த விமானிகளில் யாரையாவது தேர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்!
நல்லது!
நான் குடித்துவிட்டு விமானம் ஓட்டியதற்காக என்னை வேலையில் இருந்து நீக்கி விட்டார்கள்!
நீதான் எனக்கு வேண்டும்!

ஜான் எல்லா ஏற்பாடுகளையும் தடபுடலாக நிறைவேற்றிவிட்டான்.
ஜான்! நீங்கள் எங்கே போகிறீர்கள்?
ஒரு சின்ன வேலை இருக்கிறது!, நீ வீட்டுக்குப் போ! யாரும் என்னைக் கேட்டால் தெரியாது என்று சொல்லிவிடு!
ஜான் தன் ஆட்களுடன் விமானத்தில் புறப்பட்டான்.
ஆகா...! அங்கிருக்கும் மணல் முழுவதையும் அள்ளிவிட வேண்டியதுதான்!
எங்கே போகிறோம்
தெரியவில்லையே?

ஜான்! உன்னுடைய திட்டம்தான் என்ன?
திட்டமா...?
ஹெலிகாப்டர் எங்கே இருக்கிறது?
அங்கே நமக்காக காத்திருக்கும்!
விமானம் தரை இறங்கியது.
ஆகா என்ன ஒரு அருமையான இடம்!
பரவாயில்லையே நண்பர்கள் குழுவாக சுற்றிப் பார்க்கப் போகிறார்கள்!



ஹெலிகாப்டர் அவர்களுக்காக தயாராக இருந்தது.
ஜான்! இப்பொழுது எங்கே போகவேண்டும்!
இராசாயணப் பொருளை ஆராய்ச்சி செய்ய புறப்படுகிறோம்!
விமானி! ஹெலிகாப்டரை ஒருமுறை பரிசோதித்துக்கொள்!

ஜான்! எல்லாம் சரியாக இருக்கின்றன!
பெட்டிகளை எல்லாம் தூக்கி ஹெலிகாப்டரில் ஏற்றுங்கள்!
தங்கத்தை கொள்ளை கொள்ளையாக அள்ளிவிட வேண்டியதுதான.
அப்போது ஒருவன் ஜானியை நோக்கி வேகமாக வந்தான்.

என்னைத் தெரிகிறதா? ஓட்டலில் அறையை சுத்தம் செய்ய வந்தபொழுது தங்கத் துகள்களை காட்டினீர்களே'
வெறும் மணலைப் போய் தங்கத் துகள் என்கிறாயே பைத்தியமா!
நீ தங்கநகை செய்பவரிடம் காட்டியபோது 50 சதவீதம் தங்கம் இருக்கிறது என்று சொன்னதை கேட்டேன!
வாயை மூடுடா! உன் வாழ்க்கை முடியப் போகிறது!
கெலிகாப்டர் புறப்பட்டது. அந்த வேலைக்காரனையும் ஜான் சேர்த்துக் கொண்டான்.
ஜான்! எந்தப்பக்கம் போவது. வரைபடத்தை காட்டுங்கள்!
முதலில் மேற்குப் பக்கமாக போ! நான் சொல்லிக்கொண்டே வருகிறேன்!
சிறிதுநேர பயணத்திற்குப் பிறகு கெலிகாப்டர் தங்க கடற்கரையின் மேல் பறந்தது.
இந்தத் தீவை பார்த்தீர்களா? மணல் தகதகவென்று மின்னுகிறதே!
இதே இடம்தான். கெலிகாப்டரை இறக்கு!
அப்போது ஒரு காட்டுவாசி மறைந்திருந்து அவர்களைப் பார்த்தான்.

ஹெலிகாப்டர் தங்கக் கடற்கரையில் தரை இறங்கியது.
என்ன அழகான கடற்கரை!
கொஞ்சநேரம் கடலில் குளிப் போமா?
அருமையான யோசனை! அசதிதீர குளிக்கலாம்!.
என்ன குளுமை! ஒரு வீடு கூட இருக்கிறதே!
இல்லை! யாரும் குளிக்கக்கூடாது. முதலில் வேலையை முடிக்க வேண்டும்!
முரசு கொட்டுபவன் செய்தியை பரப்ப தயாராக காத்திருந்தான்.
ஜான்! இந்த மணல் மஞ்சளாக வித்தியாசமாக இருக்கிறதே!
இரசாயணப் பொருள் சல்பர் கலந் திருக்கிறது. தீப்பெட்டி மருந்து தயாரிக்கலாம்!

தீப்பெட்டி மருந்தா?
இது தங்கம் என்ற இரகசியம் உன்னையும் என்னையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது! இரகசியமாகவே இருக்கட்டும்!
இவன் கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கிறானே!


ஏய் ஜான்! இந்த வீடு என்ன பச்சைப்பசேல் என்று இருக்கிறதே!
அது நமக்கு எதுக்கு? முதலில் மணலை அள்ளி மூட்டையாக கட்டுங்கள்!
ஜான்! அதோ ஒருவன் நம்மை பார்க்க வருகிறான்!
காட்டுவாசி ஒருவன் அவர்களை நோக்கி வந்தான்.

உடனே ஜான் துப்பாக்கியை கையில் எடுத்தான். வந்தவன் காட்டு பாசையில் ஏதோ சொன்னான்.
இவன் என்ன சொல்கிறான்?
இங்கே யாரும் தங்கக்கூடாதாம். இது மாயாவியின் கடற்கரையாம்!
இது மாயாவியின் முத்திரையாம். பேசாமல் போய்விடுங்கள் என்று சொல்கிறான்!
நீ என்னடா எங்களை போகச் சொல்வது?
ஆ...!

அவனை கொன்று விட்டாயா?
அவனை கட்டிப்போடுங்கள்! பெட்டிகளில் மணலை நிரப்புங்கள்!
இன்னொரு காட்டுவாசி மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

ஜான்! முன்பின் அறிமுகமில்லாத இடத்துக்கு வந்து அங்குள்ளவனை சித்திரவதை செய்கிறோம்!
இவன் என்ன கிழித்துவிடுவானா? இறுக்கமாக கட்டுங்கள்!

முரசு கொட்டுபவன் தென்னை மரத்தில் இருந்து செய்தியை பரப்பினான்.
ஒரு கூட்டம் வானத்தின் வழியாக தங்கக் கடற்கரைக்கு வந்திருக்கிறது! மாயாவி விரைந்து வருக!
ஒரு கூட்டம் வானத்தின் வழியாக தங்கக் கடற்கரைக்கு வந்திருக்கிறது! மாயாவி விரைந்து வருக!!
?
ஜான் ஏதோ முரசு சத்தம் கேட்கிறதே!
பயமாக இருக்கிறது!
ஏன் பயப்படுகிறீர்கள் நம்மிடம்தான் துப்பாக்கி இருக்கிறதே!
டம்... டம்...
டம்... டம்...

வேலை மும்முரமாக நடந்தது.
தீப்பெட்டி மருந்து செய்ய இந்த மணல் உதவுமா?
ஆமாம்! இதில் சல்பர் கலந்திருக்கிறது! எடுத்துப் போனால் நல்ல ஆதாயம் கிடைக்கும்!
ம்...! என்ன பேச்சு...! வேலையை கவனியுங்கள்!

ம்...! என்ன மொச்சைக்கொட்டை மாதிரி விழித்துக் கொண்டிருக்கிறீர்கள்!
முரசு சத்தம் கேட்டு நம் ஆட்கள் பயப் படுகிறார்கள்!

ஆமாம்! ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று நினைக்கிறேன்!
யார் முரசு கொட்டுவது? நான் பார்க்கிறேன்!
ஜான் பைனாகுலரில் பார்த்தான்.

முரசு கொட்டுபவன் இருக்கும் இடம் தெரிந்ததும் துப்பாக்கியை எடுத்துச் சுட்டான்.
ஆ....!
டுமீல்....!
காக்காவை சுடுவதைப் போல முரசு அடிப்பவனை சுட்டான்.


சிறிதுநேரம் அந்தக் கடற்கரையே மயான அமைதியாய் காட்சி அளித்தது. சிறிது நேரத்தில்-
ஒரு கூட்டம் வானத்தின் வழியாக தங்கக் கடற்கரைக்கு வந்திருக்கிறது!! மாயாவி விரைந்து வருக!!
மாயாவி
மாயாவி
மாயாவி
மாயாவி
தூரத்தில் இன்னொரு முரசு முழங்கியது!

மரத்தில் இருந்து தலைகுப்புற விழுந்தவனை ஜான் தேடினான்.
இவன்தான் இறந்துவிட்டானே. பிறகு எப்படி சத்தம் வருகிறது?
செய்தி காட்டுத்தீ போல பரவியது.
டம்... டம்... டம...
ஒரு கூட்டம் வானத்தின் வழியாக தங்கக கடற்கரைக்கு வந்திருக்கிறது!
மாயாவி விரைந்து வருக...!!
டம்... டம்...
டம... டம...
திடீரென்று நாலாபுறத்திலும் இருந்து முரசு சத்தம் கேட்டது.

பைலட்! இந்த முரசு சத்தத்திற்கு என்ன அர்த்தம்!
ஒரு கூட்டம் வானத்தின் வழியாக தங்கக் கடற்கரைக்கு வந்திருக்கிறது! மாயாவி விரைந்து வருக!! எனறு அர்த்தம்!
மாயாவி விரைந்து வருக!! என்றால் என்ன?
மாயாவி என்பவர் இந்த முத்திரைக்கு சொந்தக்காரர்.
ஜான்! நம் ஆட்களை பதுங்கிக் கொள்ளச் செய்துவிட்டு இரவில் வேலையை தொடங்குவோம்!
வேண்டாம்! இதற்கெல்லாம் பயப் படக்கூடாது! நம்மிடம்தான் துப்பாக்கிகள் இருக்கிறதே! ஒருகை பார்த்து விடுவோம்!

ஒரு கூட்டம் வானத்தின் வழியாக தங்கக் கடற்கரைக்கு வந்திருக்கிறது! மாயாவி விரைந்து வருக!!
செய்தி காடு முழுக்க பரவியது.
முடிவில் மாயாவியின் காதுக்கும் செய்தி எட்டியது.
ஒரு கூட்டம் வானத்தின் வழியாக தங்கக் கடற்கரைக்கு வந்திருக்கிறது! மாயாவி விரைந்து வருக!!
வானத்தின் வழியாக... விமானம் மூலம் வந்து இருக்கலாம். இல்லை மணலாச்சே.. ஒருவேளை கெலிகாப்டரில் வந்திருக்கலாம்!
ஒருவேளை புயலில் சிக்கி கரை ஒதுங்கியவன் கூட்டத்தோடு வந்திருப்பானோ?
மாயாவியின் ஊகம் சரியாகத்தான் இருந்தது.
உடனே மாயாவி குதிரையை தங்கக் கடற்கரையை நோக்கி விரட்டினார்.
தங்கக் கடறகரை விலைமதிக்க முடியாத ஒன்று. அது காட்டுக்குள் இருப்பது யாருக்கும் தெரியாது! இப்பொழுது...

மாயாவி தங்கக் கடற்கரைக்கு வருவதற்குள் இருட்டிவிட்டது. மெதுவாக குதிரையை விட்டு இறங்கி பூனை போல நடந்து வந்தார். ஓர் இடத்தில்...
ஆ...! முரசு அடிப்பவன் செத்துக் கிடக்கிறானே...! பாவிகள் கொன்று விட்டார்களா?
பார்வையை அப்படியே கடற்கரை பக்கம் திருப்பினார்.
அடப்பாவிகள்! தங்க மணலை ஏற்றுமதி செய்கிறீர்களா?
ஏய்...! இன்னும் இரண்டு பெட்டிகள் உள்ளே இருக்கிறது. எடுத்து நிரப்புங்கள்!
நான் புயலில் சிக்கியிருக்கா விட்டால் இந்த தங்கத்தை இழந்திருப் பேனே!

Tex Sampath Tirupur

நீங்கள் ஒவ்வொருவராக சாகவேண்டியதுதான!
ஆ...!
டுமீல்...!
வேலைக்கார நாய நீதான் எனக்கு தலைவலியாக இருந்தாய்...! செத்துத் தொலை!
ஜான் ஓட்டலில் இருந்து பின்தொடர்ந்துவந்த வேலைக்காரனை சுட்டுக்கொன்றான்.
துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் மற்றவர்கள் ஓடிவந்தார்கள்.
என்ன நடந்தது?
என் பேச்சைக் கேட்காவிட்டால் உங்களுக்கும் இந்தக் கதிதான்!
சரி பைலட்டைத் தவிர அனைவரும் வரிசையாக நில்லுங்கள்!
ஏய்... ஜான்! என்ன இது?
முட்டாள்! நீதான் இவர்களின் தலைவனா?
இனி நீங்கள் எனக்குத் தேவை யில்லை!

உங்களை உயிரோடு விட்டால் இந்த இடத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டு காட்டிவிடுவீர்கள்!
ஜான்! என்ன முட்டாள்தனம். இது இரவு நேரம். நாம் இருப்பது காட்டுப் பகுதி. ஏதாவது ஒன்று என்றால் உதவிக்கு ஆள் வேண்டாமா?
பைலட்! வந்த வேலை முடிந்துவிட்டது! இனி புறப்பட வேண்டியதுதான்!
ஜான்! அவசரப்பட்டு விடாதே!
மன்னிக்கவும் தோழர்களே! கெலிகாப்டரில் உங்களை ஏற்ற இடமில்லை. அதனால்...
ஜான்! வேண்டாம்...!
வேறு வழியில்லை! என்னை மன்னியுங்கள்!

ஜான் அவர்களை சுட முயன்றபோது எங்கிருந்தோ வந்த துப்பாக்கிக்குண்டு அவன் துப்பாக்கியை பறித்தது.
யாரடா அது...?
டுமீல்....!

ஏய்....! வாருங்கள்!
நெருப்பு பிடித்து விட்டதே!
யாரோ ஒருவன் மறைந்திருந்து தாக்குதல் நடத்துகிறான்!
reserved.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும்தான் தாமதம் அனைவரும் துப்பாக்கியை எடுத்து வந்தாாகள.
டுமீல்...
டுமீல்...!
மீண்டும் துப்பாக்கிக்குண்டு சரமாரியாக வந்து அவர்களின் துப்பாக்கியை தட்டிவிட்டது.

அவர்களின் துப்பாக்கி பறிபோன தும், மாயாவியின் இரும்புக்கை அவர்களை பதம் பார்த்தது.
கும்...கும்...!
ஆ...அம்மா...!
கும்மிருட்டில் தாக்குதல் நடத்துவது யார் என்று புரியாமல் குழம்பினார்கள்.

பைலட்! நெருப்பை பற்றவை. யார் என்று பார்ப்போம்! என்ன தைரியமிருந்தால் என்னையே சுடுவான்!

நெருப்பு பற்றவைத்தும் இருள் விலகத் தொடங்கியது. வெளிச த்தில் மாயாவி இரண்டு கை களிலும் துப்பாக்கியடன் நின்றுகொண்டிருந்தார்.

இந்தக் கடற்கரை புனிதமானது! இங்கு யாருடைய உயிரும் அனாவசியமாக போகக்கூடாது!
யார் நீ?
நான் பலமுறை எச்சரித்தேன்
அவர்கள் கேட்கவில்லை! பதிலுக்கு என்னை அடித்து போட்டு கை கால்களை கட்டிப் போட்டுவிட்டனா!

மாயாவி அந்த காட்டுவாசியின் கட்டுக்களை அவிழ்த்துவிட்டார்.
முரசு அடிப்பவனை யார் சுட்டுக் கொன்றது!
ஜான்! அவன்தான் இந்தக் கூட்டத்தின் தலைவன்!
பைலட்! நீயும் மற்றவர்களும், கெலிகாப்டரில் ஏற்றி வைக்கப் பட்டுள்ள மண் மூட்டைகளை இறக்கி போடு!
மணலை விரைவாக கொட்டுங்கள்! இந்த இடத்தைப் பற்றி வெளியில் சொல்லக் கூடாது! இரகசியமாக இருக்க வேண்டும்!
இரகசிய மாகவா?

எல்லா மூட்டைகளையும் இறக்கிவிட்டீர்களா? ஜானைத் தவிர அனைவரும் விமானத்தில் ஏறுங்கள்!
இந்த இடத்தை இத்தோடு மறந் விட வேண்டும்! வெளியே மூச்சு விட்டால் ஆள் காலி! எச்சரிக்கை!
ஜான் இந்த மணலை திருட் முயன்றது, இர்ண்டு பேரை இந்தக் கடற்கரையில் வைத்து கொன்றது மாபெரும் குற்றம்! தண்டனை அடைந்தே ஆகவேண்டும்!
கெலிகாப்டர் மற்றவர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது.
பைலட்! என்ன இது! ஒன்றுமே புரிய வில்லை!
சல்பரை கடத்த முயன்றோம் அல்லவா?
இந்த இடத்தை அடியோடு மறந்துவிடுங்கள்! இல்லை ஆள் காலி! நினைவிருக்கட்டும்!
மாயாவி இதேபோல்தான் காட்டின் ஒவ் வொரு பகுதியையும் பாதுகாத்து வருகி றார். அவர் கண்ணைத் தப்பி யாரும் எது வும் செய்துவிட முடியாது.
பத்திரமாக அழைத்துச் செல்!
இப்படியொரு கடற்கரை இருப்பது அதிசயமான ஒன்றுதான்.
(முடிந்தது)

அடுத்த
காமிக்ஸ்

ஊரையே நடுங்க வைக்கும்

முகத்திரையைக் கிழித்தால்,
முகமூடிக்குள் இன்னொரு முகமூடி!
மயிர்க்கூச்செறியும் மர்மக் கதை!

மார்ச்சு 1ந்தேதி
"ராணிகாமிக்ஸ்"சில்
இடம்பெறுகிறது!

படிக்கத் தவறாதீர்கள்!!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.


PRESENT SIR !
ampro Milk Base
Never absent from
classrooms and school bags,
play fields and lockers,
short breaks and lunch breaks.
ampro® Milk Base
The School going Biscuit
Siste's-EIL-758/91